மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

கலையும் - அறிவும்!

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 28—8—60 ஒலி 43

கொள்ளை போன கொள்கை வீரா, நீ வாழ்க! உன் நாடு வாழ்க !

"குடந்தை மாநகரில் கொள்ளை போனன் ஒரு கொள்கை வீரன்—ஐயோ, மாண்டொழிந்தான் ஒரு கொள்கை வீரன்" என்ற செய்தி நம்மையெல்லாம் திடுக்கட வைத்திருக்கிறது, திகைக்க வைத்திருக்கிறது! சோகத்தால் நம்மை வாட வைத்திருக்கிறது !!

குடந்தை மாநகரில் ஒரு பொதுக்கூட்டம் நடந்ததாம்—அஹிம்சா மூர்த்தி காந்தி சீடர்கள் நடத்திய கூட்டமாம் அது! அந்தக் கூட்டத்தில் ஒரு புதுக் கொள்கை வீரர் ஒரு பெரும் புரட்சி செய்தாராம்! அந்த அரசியல் நாணயஸ்தர், நம் அரும் பெரும் தலைவர் அண்ணாவைத் திட்டினாராம்! எதைப் பேச மனித இனம் கூசுமோ, எதைச் சொல்ல மனித இனம் நாணுமோ அதையெல்லாம் சொல்லிச் சொல்லி திட்டினாராம் அந்த அரசியல் தங்கக் கட்டி!

கொதித் தெழுந்தான் கொள்கை வீரன் இராமலிங்கம்—"அண்ணாவைத் திட்டாதே, அவரது ஆற்றலைத் தூற்றாதே, தனிப்பட்ட முறையில் தாக்காதே" என்று உள்ளக் குமறலோடு கூறினனும்!

ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டும் காந்தி சீடர்கள் அந்த இலட்சிய வாதியைச் சுற்றி வளைத்தார்களாம்—போலீசார் வசம் ஒப்புவித்தார்களாம் போலீசார் அவனைக் காவலில் வைத்தார்களாம்! பின்னர் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றார்களாம்! அங்கே அந்த இலட்சிய வீரன் மாண்டானும்! மரணத்தை அணைத்துக் கொண்டானும் !!

இந்த நாகரீக உலகத்தில் இனி மனிதர்களே வாழ முடியாது போலிருக்கிறது! இனி எந்த கொள்கையையும் கடைப்பிடித்தால் உயிர் தப்பமுடியாது போலிருக்கிறது! இதுதான் அரசியலா? இதுதான் காந்தியார் வளர்த்த அரசியலா?

ஒரு மாபெரும் சக்தி படைத்த ஒரு இயக்கத்தின் பெரும் தலைவரை-ஆயிரமாயிரம் இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்துவிட்ட ஒரு ஆற்றல் படைத்த தலைவரைத் திட்டுவது—திட்டாதே என்று கேட்டால் அவரைச் சுற்றி வளைப்பது, போலீசார் வசம் ஒப்புவிப்பது, முடிவில் அவன் உயிருக்கே ஆபத்தை விளைப்பது என்றால் இந்த நாட்டில் அரசியல் என்ற சொல்லுக்கே வேலை இல்லையா?

பேச்சுரிமை, எழுத்துரிமை என்றெல்லாம் வழங்குவது. ஜனநாயகத்தின் பேரால் நடத்தப்படும் வெறும் கண்கட்டு வித்தைதானு? வெறும் வர்ண ஜால வார்த்தைதானு?

குடந்தை கூட்டத்தில் இராமலிங்கம் குழப்பம் விளைவித்தானு? கூட்டம் நடத்தக் கூடாது என்று தடுத்துக் கலகம் செய்தானு? கேள்வி கேட்டான்! திட்டாதே என்று சொன்னன்! இதற்காக அவன்மீது ஏன் பாய வேண்டும்? போலீசார்வசம் ஏன் ஒப்புவிக்கவேண்டும்?

உங்கள் கொள்கையில் உறுதி இருக்குமானல்—அவனை மேடைக்கு அழைத்து, உன் கட்சியைப் பற்றி விளக்கம்தந்து, எங்கள் கொள்கைகளைப்பற்றி விமர்சனம் செய்து அவன் உள்ளத்தைத் திருத்தி, அவனை உன் கூடாரத்திற்கு அழைத்துச் சென்றிருக்கலாமே! இதைச் செய்ய உங்களுக்கு ஆற்றல் இல்லையா? திறமை இல்லையா?

ஒரு இராமலிங்கம் மாண்டுவிட்டால் அந்த இலட்சியமே அழிந்துவிடுமா? அந்தக் கொள்கையே அழிந்துவிடுமா? எத்தனை எத்தனை இராமலிங்கங்கள் உயிரைத் தத்தம் செய்து கொடுக்கப் புறப்படுவார்கள்! புத்தியால் சாதிக்க முடியாததை கத்தியால் சாதித்துவிட முடியுமா? ஒருக்காலும் முடியாது, முடியவே முடியாது!

எப்படியோ ஒரு உயிர் போய்விட்டது, எப்படியோ ஒரு கொள்கை வீரன் மாண்டொழிந்துவிட்டான்! இனி எதைச் சொன்னாலும் அவனை மீட்க முடியாது. கதறினாலும்! கதறினாலும்! அழுதாலும், புரண்டாலும்! அவனை இனிக் காண முடியாது. ஆனல் அவன் உள்ளத்திலே அரும்பி இருந்த கொள்கை, அவன் எண்ணத்திலே மலர்ந்திருந்த இலட்சியம் வளரும், வேகமாக வளரும் என்பதை மட்டும் எவரும் மறந்துவிடக்கூடாது.

கொள்ளை போன கொள்கைவீரா, நீ ஏனடா அந்தக் கூட்டத்திற்குச் சென்றாய்?

"அரசியல் நாகரீகத்தோடு பேசுவார்கள்" என்று சென்றாயா?

'கொள்கை முழங்குவார்கள், இலட்சியம் போதிப்பார்கள்" என்று சென்றாயா?

"உலகம் போற்றும் உத்தமர் காந்தியாரின் தத்துவங்களைப் புட்டுப் புட்டு வைப்பார்கள், அதைக் கண்டு மகிழலாம்" என்று சென்றாயா?

"விடுதலை பெற்ற நாட்டில் சாதித்த சாதனைகளைப் பற்றி சொல்லுவார்கள்—அதைக் கண்டு இன்பமடையலாம்" என்று சென்றாயா?

ஏனடா சென்றாய், அங்கே?

மாற்றார் கூட்டங்களுக்குச் சென்று நல்ல விளக்கங்களைப் பெற்று மன மகிழ்ச்சியோடு திரும்புவதற்கு ஏற்ற நாடா இது? இல்லையடா இல்லை. அந்த நிலை இங்கு இல்லையடா, இல்லை.

வேற்றார் கூட்டங்களுக்குச் சென்றால் இங்கு வேதனை பட்டுத்தான் திரும்பவேண்டும்.

நம்முடைய மாற்றார்கள் எதற்காக கூட்டங்களைப் போடுகிறார்கள்?

கொள்கைகளைச் சொல்லுவதற்கா? இல்லை, இல்லை!

கோட்பாடுகளை எடுத்து விளக்குவதற்கா? இல்லை, இல்லை!

குறிக்கோள்களை எடுத்து இயம்புவதற்கா? இல்லை, இல்லை!

நாம் பெற்ற விடுதலைக்குப் பின்பு நாடு கண்ட நல்வாழ்வைப் பற்றி எடுத்து விளக்குவதற்கா? இல்லை, இல்லை!

அவர்கள் கூட்டம் போடுவது நம்மைத் திட்டுவதற்கு—"அவன் குள்ளன, இவன் நெட்டை" என்று வசைமாரி பொழிவதற்கு—'அவன் இந்த ஜாதி, இவன் அந்த ஜாதி" என்று இழித்துப் பேசுவதற்கு! இதை அறியாமல் ஏனடா அங்கே சென்றாய்?

இலட்சக் கணக்கான இளைஞர்கள், இலட்சக் கணக்கான பெரியவர்கள், இலட்சக் கணக்கான தாய்மார்கள் நம் தலைவரை அன்பு ததும்ப "அண்ணு" என்று அழைக்கிறார்கள். இதைவிட பெருமை நம் தலைவருக்கு வேறு என்னடா வேண்டும்? பைத்தியக்காரா! எங்கோ எதற்காகவோ, எதை எதிர்பார்த்தோ ஒரு சிலர் திட்டுகிறார்கள் என்றால் அதைப் பற்றி நாம் ஏனடா

(5ம் பக்கம் பார்க்க)

இந்தியை எதிர்த்து மீண்டும் அறப்போர்!

வெறும் வாய்ப் பேச்சு வேண்டாம்!

அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்!

பொதுக் கூட்டங்களைக் கூட்டுங்கள்! கண்டன ஊர்வலங்களை நடத்துங்கள்! உரிமையைப் பெற போர் முழக்கம் செய்யுங்கள்!

கழகத் தோழர்களுக்கு நாவலர் இடும் கட்டளை!

"இத்திங்கள் 31-ம் நாள் முதல் ஒரு வார காலத்திற்கு இந்திமொழித் திணிப்பை எதிர்த்து கண்டனக் குரல் எழுப்ப வேண்டும்" என்று நமது பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் கட்டளை யிட்டிருக்கிறார்"

"அமைதியான முறையில் ஊர்வலங்கள் நடத்தி, கூட்டங்களைக் கூட்டி—இந்தி மொழி திணிப்பை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றி ஆட்சியாளர்களுக்கு அனுப்ப வேண்டும்" என்று நமது காவலர் நமக்கெல்லாம் கட்டளைப் பிறப்பித்திருக்கிறார்!

அவரது ஆணையை நிறைவேற்றித் தர ஆயிரமாயிரம் இளைஞர்கள் உடனே புறப்பட வேண்டும்! கழகத் தோழர்கள் மட்டுமல்ல பொதுமக்களும் இதில் பங்கு கொள்ள வேண்டும்! குறிப்பாக, பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் கட்சிக் கண்ணோட்டம் செலுத்தாமல் பங்கு கொள்ள வேண்டும்!

குமார பாளையத்தில் கூடி மிகப் பிரம்மாண்டமான போராட்டத்தை நடத்த நாம் முடிவு செய்தோம்! இதற்கிடையில் நமது பெரு மதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் தமிழகம் வருவதாக இருந்தது! அதையொட்டி, அவருக்கு நமது கொந்தளிப்பை எடுத்துக்காட்ட கருப்புக் கொடி பிடிப்பதென முடிவு செய்தோம்!

இதைக் கண்டு ஆட்சியாளர்கள் மனம் பதறினர்கள்! பெரும் தலைவர்களெல்லாம் வேண்டுகோள் விடுத்தார்கள்! "இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது" என்று உறுதி மொழியும் தந்தார்கள்!



நம்மை மதித்து நமக்கு உறுதி மொழியளித்த பொறுப்புள்ள பெரிய மனிதர்களின் வேண்டுகோளை நாம் புறக்கணிக்க விரும்ப வில்லை! அவர்களுக்கு மதிப்பளிக்கவே விரும்பினோம்!" அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்" என்று விரும்பிய காரணத்தால் தான் நாமும் கருப்புக் கொடி கிளர்ச்சியைக் கைவிட்டோம்!

பெரும் பொறுப்புகளை வகிக்கும் பெரிய மனிதர்களின் வேண்டுகோளை புறக்கணிப்பது அரசியல் நாகரிகமாகாது என்ற காரணத்தால் தான் நாம் இந்த முடிவுக்கு வந்தோம்!

இந்தி அறவே ஒழிந்து விட்டது என்று எண்ணியோ, அல்லது இந்தியை அறவே ஒழித்து விடுவார்கள் என்று கருதியோ நாம் கருப்புக் கொடி நிகழ்ச்சியை கைவிடவில்லை! பெரிய மனிதர்களை மதித்தோம்—அவ்வளவுதான்!

இதை ஏன் பன்னிப் பன்னி சொல்லுகிறோமென்றால் அரசியலே தெரியாத அரசியல் அப்பாவிகளுக்கு உணர்த்தவே! கேலியும், கிண்டலும் புரியும் மனித ஜந்துக்களுக்கு உணர்த்தவேதான்!

அரசியல் சட்டப்படி 1965-ம் ஆண்டுக்குப் பின் இந்தி பொது மொழியாகிவிடும்! அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மிகத் துரிதமாக செய்து கொண்டு வருகிறது! மத்திய சர்க்காரின் பணிமனைகளில் இந்தி மிக வேகமாக நுழைந்து கொண்டே வருகிறது! மத்திய சர்க்காரில் பணி செய்ய வேண்டுமென்றால் இந்தி படிக்கத்தான் வேண்டும்—இந்தி படித்தால்தான் முறைப்படி உத்தியோகம் பார்க்க முடியும்! முறைப்படி உத்தியோகம் பார்த்தால்தான் முறைப்படி உத்தியோக உயர்வும் கிடைக்கும்!

இந்த நிலை ஏற்பட்ட பின்பு இந்தி மொழியை நம்மீது கட்டாயமாகத் திணிக்கத் தேவையே இல்லை! சோற்றுக்குத் திண்டாடும் மக்கள், வேலையில்லாமல் திரிந்து அலையும் மக்கள் தாளுகவே இந்தியை கற்றுக் கொள்ளுகிறார்கள்! இந்த நிலை வருமானால் பிறகு ஆங்கில மொழி நீடித்தும் என்ன பயன்? ஆங்கிலம் சோறு போடவில்லையானல், ஆங்கிலம் உத்தியோகம் தரவில்லையானல் அதை கற்றுதான் என்ன பயன்? அது 1965-க்குப் பிறகும் நீடித்துதான் என்ன லாபம்!

தலைவர்களுடைய வாய்தான்

(4ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம் எத்தனைக் காலத்திற்கு நீடிக்கும் என்ற உறுதிமொழி எங்களுக்குத் தேவையில்லை !

இந்தியை எத்தனைக் காலத்திற்குத் தள்ளி வைப்பீர்கள் அதை முதலில் சொல்லுங்கள்!

இந்தி என்று வருகிறதோ அன்றே எங்கள் நாடும் பிரியும் !

பொதுச் செயலாளர் கட்டளை
(முன் பக்கத் தொடர்ச்சி)

உறுதிமொழிகளை அள்ளி வீசுகின்றதே தவிர, அவர்களுடைய கரத்திலே இருக்கின்ற பேனா உத்திரவுகளைத் தீட்டிக் கொண்டுதான் இருக்கின்றது! இந்த இரட்டை நாக்குப் படைத்தவர்களின் உறுதி மொழிகளை நாம் எப்படி நம்ப முடியும் !

நாளுக்கொரு விதமாகப் பேசுகிறார்கள், ஆளுக்கொரு விதமாகப் பேசுகிறார்கள் ! இந்தி வராது என்கிறார்கள், இந்தி கட்டாயமில்லை என்கிறார்கள் ! ஆனால் அஞ்சல் அட்டைகளில் இந்தி — ஏன் ? மணியார்டர் கூப்பன்களில் இந்தி — ஏன்? மைல் கற்களில் இந்தி—ஏன் ? புகை வண்டி நிலையங்களில் இந்தி —ஏன் ? இந்தி பிரச்சார சபை —ஏன்?

நமது பெருமதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்கள் சென்னை சுதந்திர தின விழா பொதுக் கூட்டத்தில்— "எங்கள் மீது ஆங்கிலத்தைத் திணிக்காதீர்கள்" என்று கூறி இருக்கிறார் ! அதன் பொருள் என்ன ? வடவர்கள் ஆங்கிலத்தை விரும்பவில்லை என்றதானே அர்த்தம்! வடவர்கள் ஆங்கிலத்தை விரும்பவில்லை என்றால் தென்னவர்கள் மட்டும் ஆங்கிலத்தை விரும்பி என்ன பயன் ?

நீங்கள் ஆங்கிலத்தைப்படிக்க மாட்டீர்கள்— இந்தியைத்தான் படிப்பீர்கள் ! உங்களோடு நாங்கள் எப்படி உத்தியோகம் பார்க்க முடியும்!

ஒரு இந்தி மொழி பேசும் பஞ்சாபி, ஒரு இந்தி மொழி பேசும் குஜராத்தி, ஒரு இந்தி மொழிபேசும் வங்காளி வேலைப் பார்க்கும் மத்திய சர்க்கார்பணி மனையிலே ஒரு ஆங்கிலம்பேசும் தமிழன் எப்படி வேலைப்பார்க்க முடியும்!'' மத்திய சர்க்கார் பணிமனைகளில் நுழையாதீர்கள் என்று கூறுகிறீர்களா ? இதைத் திட்டவட்டமாக விளக்கிச் சொல்லி விடுங்கள் ! இந்தி கட்டாயமில்லை, இந்தி கட்டாயமில்லை'' என்று மழுப்பாதீர்கள்!

"இந்திமொழி பேசாதமக்கள் மீது இந்தி கட்டாயமாகத் திணிக்க மாட்டோம்'' என்று சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது ! அரசாங்கத்தின் பொது மொழி இந்தி—அதை வடவர்கள் கட்டாயமாகப்படிக்கிறார்கள் ! நாங்களோ கட்டாயமாகப் படிக்கத் தேவையில்லை! இதற்கு என்ன அர்த்தம்? அரசாங்க மொழியே கற்காவிட்டால் வேலைக் கிடைக்காது என்பது தானேஇதற்குச் சுருக்கமான விளக்கம்!

"உங்களுக்கு இந்தி மொழி தேவையா - அல்லது கொஞ்ச காலத்திற்காவது தென்னாடு தேவையா?" என்பதை நீங்கள் அவசர அவசரமாக முடிவு செய்து கொள்ள வேண்டும்!

இந்திதான் பொது மொழி என்று கர்ஜித்தால், நீங்கள் தென்னாட்டை உடனடியாக இழக்க வேண்டும்!

இந்தி மொழியைப் புகுத்தி தென்னாட்டு மக்களை வஞ்சிக்காதீர்கள்!'' இந்தி வராது, இந்தி வராது'' என்று வாய் ஜாலம் பேசி இந்தியை நுழைப்பீர்களானால் தென்னகம் கொதித்தெழும்! உங்களிடமிருந்து விரைவாக விடை பெற்றுக் கொள்ளும்!

"தூங்கமாட்டோம்"

புலவர் பொன்னி வளவன்

பிடித்தவர்க்கோ நம் இயக்கம் கரும்பு; ஆனால்
பிடிக்காத பேர்களுக்கு மிளகாய் ! நாளும்

கொடுத்துவரும் குரல்முழக்கம் டில்லி ஆட்சிக்
குரல்வளைக்கு எச்சரிக்கை ! நமது செய்கை

தடுத்திடவும் ஆளுண்டா ? உண்டு என்றால்
தமிழனுக்குப் பிறந்தவனாய் இருக்கமாட்டான் !

எடுத்தசெயல் முடிக்காமல் தூங்க மாட்டோம் !
இனிமேலும் வடவர்களால் ஏங்க மாட்டோம்!

அண்ணாவின் தம்பிகள்நாம் இந்த அண்ணா
அமைதியுரு நமக்கெல்லாம் ! எதிரி நெஞ்சைப்

புண்ணாக்கும் தமிழ்ப்போர்வாள் ! திராவி டத்தின்
புகழ்பாடப் போகின்றோம் ! அரிசி தந்தி

பிண்ணாக்கைத் தின்பதுகள் நம்மைப் பார்த்துப்
பிதற்றட்டும் ! வடநாட்டுத் திமிர் வாதத்தை

மண்ணாக்கும் வரைநமக்கு ஓய்வே இல்லை !
மறத்தமிழர் நாம் இனியும் தூங்கமாட்டோம் !

அடித்துவைத்து கற்சிலையா டில்லி தேவர்
அடிதாங்கும் தமிழ்நாட்டுக் காங்கி ரஸ்ஸோம் ?

வெடித்தெழும்பும் எரிமலையின் திக்கு மும்பில்
வீழாதீர் ! வேகாதீர் ! உங்கள் காலை

எடுத்துவைத்து முன்னேற்றப் பாச றைக்குள்
இப்பொழுதே நுழையுங்கள் ! இல்லை யென்றால்

அடுப்படிக்குள் ஒளிவதற்குப் புறப்ப டுங்கள் !
அடைந்திடுவோம் திராவிடத்தை! தூங்க மாட்டோம்!

இந்தி மொழியால் இந்தியாவின் ஒற்றுமையை நிலைநாட்டி விடலாம் என்று நினைக்காதீர்கள்! அந்த கனவு ஒருநாளும் பலிக்காது! இந்தி மொழிதான் இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைக்கும்! கொஞ்ச காலத்திற்காவது இந்தி மொழியைத் தள்ளிப் போட்டீர்களானால், கொஞ்சகாலத்திற்காவது இந்தியாவின் ஐக்கியம் காப்பாற்றப்படும் ! இல்லை என்றால் இந்திதான் இந்தியாவின் ஒற்றுமையை முதலில் அழிக்கும் !

1965-க்குப் பின்பும் ஆங்கிலம் நீடிக்கும் என்பது அசடர்களுக்குச் சொல்ல வேண்டிய வார்த்தை — ''ஆங்கிலம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கவேண்டும் என்று இந்தி பேசாத மக்கள் விரும்புகிறார்களோ, அவ்வளவு காலத்திற்கு ஆங்கிலம் நீடிக்கும்'' என்று சொல்வது வெறும் அரசியல் தற்குறிகளுக்குச் சொல்ல வேண்டியவார்த்தை—எங்களுக்கல்ல.

"1965-க்குப் பின்பும் இந்தி பொது மொழியாக்கப்பட மாட்டாது—இந்தி பேசாத மக்கள் எத்தனை காலத்திற்கு இந்தி தேவையில்லை என்று கூறுகிறார்களோ, அத்தனை காலத்திற்கு இந்தியைப் பொது மொழியாக்கமாட்டோம்'' என்றஉறுதியைத்தான் சர்க்கார் தரவேண்டும் !

"ஆங்கிலம் எத்தனை காலம் வரை நீடிக்கும்" என்பது அவசியமற்றது! "இந்தி எத்தனை காலத்திற்குப் பிறகு பொது மொழியாக்கப்படும் ! அதை முதலில் சொல்லுங்கள்.

"ஆங்கிலம் நீடிக்கும் ஆங்கிலம் நீடிக்கும்'' என்று சொல்லிக்கொண்டே இந்தியைப்பொது மொழியாக்கும் சதிவேலை இனி வேண்டாம்! இந்தி எத்தனை காலத்திற்குப் பிறகுதான் பொதுமொழியாக்கப்படும் என்ற உறுதி முதலில் வேண்டும் !

எங்களைப் பொறுத்தவரையில் இந்தியை எந்த காலத்திலும் ஏற்கமாட்டோம்! இந்தியை எந்த காலத்திலும் பொது மொழியாக்க விடமாட்டோம் ! உங்களுக்கு எப்படி ஆங்கில

(10ம பக்கம் பார்க்க)

சென்னை மாவட்டத்திற்கு மணிவண்ணன் செயலாளரானார்!

துணைச் செயலாளர் பாலன்—பொருளாளர் கபாலி! அவைத் தலைவர் காஞ்சி மணிமொழியார்!

அன்பழகன், நடராசன், செழியன், சத்தியவாணி முத்து, முனுசாமி, ஜீவரத்தினம் பொதுக்குழு உறுப்பினர் பதவியை ஏற்றனர்!

கடமைவீரர்களைப் பாராட்டுகிறோம், செயல்படவேண்டுகிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டக் கழகத் தேர்தலும், பொதுக் குழு உறுப்பினர்களின் தேர்தலும் நாடு முழுவதும் நடைபெற்றிருக்கின்



றன! எல்லா இடங்களிலும் நல்ல செயல் வீரர்களே வெற்றி பெற்று வந்திருக்கின்றனர்! வெற்றி பெற்று புதிய பொறுப்புகளை ஏற்க இருக்கும் நண்பர்களை பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

நமது பெரும் தலைவர்களில் பலர் பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்! அவர்களைப் பற்றி நாம் என்ன சொல்ல என்னதான் சொல்ல முடியும்!

சென்னை மாவட்டத்திற்கு திரு. மணிவண்ணன் அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்! திரு. மணிவண்ணன் நகரசபை உறுப்பினர், ஏழைப் பங்காளர், நல்ல செயல்வீரர்! அத்தோடு உயர்ந்த பண்பும், சிறந்த குணமும், கொள்கைப் பிடிப்பும் கொண்டவர்!

இன்றுள்ள நெருக்கடி நிலையை சமாளிக்க, எதையும் தாங்கிக்கொண்டு அயராது உழைக்கும் செயல் வீரர்கள்தான் நமக்குத் தேவை! ஏற்ற தருணத்தில் ஏற்றவரை செயலாளராகத் தேர்ந்தெடுத்த, சென்னை மாநகரைப் பாராட்டுகிறோம்!

திரு. மணிவண்ணன் ஏற்றிருக்கும் இந்தப் பெரும் பொறுப்பு, பொறுப்பு வாய்ந்த பொறுப்பாகும்! உங்களது பணியால் சென்னை ஒரு புதுமையைக் காண வேண்டும்! உங்களுக்கு இருக்கிற சுறுசுறுப்பையும், உத்வேக உணர்ச்சியையும் செயலுக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்?

நாம் எத்தனையோ குடந்தைகளை காண நேரிடும் அந்நேரத்திலும் —மனதைக் கலங்கவிடாது...அவரது மனது கலங்காது, உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளை மனதில் எண்ணி பணி புரியவேண்டும்! இதனைச் செய்வார் என்று எண்ணி புதிய செயலாளரை "வருக,வருக" என வரவேற்று பணிபுரிய செல்க, செல்க" என வாழ்த்தி அனுப்புகிறோம்!

துணை மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. பாலன் நீண்டநாளைய கொள்கைக்காரர்! கொள்கைக்காரர்களுக்கு நாம் எதைச் சொல்லுவது! அவரையும் வரவேற்கிறோம் "செயலாற்றுங்கள்,செயலாற்றுங்கள்" என்று கூறி வாழ்த்துகிறோம்!

பொருளாளர், பொறுப்பை நண்பர், நகரசபை உறுப்பினர் டி. கே. கபாலி ஏற்றிருக்கிறார்! பொருள் தேவைப்படுகின்ற நேரத்தில் பொறுப்புள்ள பொருளாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார்! இருக்கின்ற பணத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட— "தேர்தல் வருகிறது அதற்கு எத்தனை இலட்சம் தேவை" என்பதை இப்போதே கணக்குப் போட்டு கொண்டிருக்க வேண்டும்! அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல்—வட்டத்திற்கு வட்டம் சென்று எத்தனை உண்டியல்கள் இருக்கின்றன, எத்தனை எத்தனை காசுகளை சேர்த்திருக்கின்றனர் என்பதை அறிந்து உண்டியல் இல்லாத இடங்களில் உண்டியலை வைத்து இலட்சம், இலட்சமாக, பொருளை சேர்க்க வேண்டும்! காலையில் எழுந்து வட்டத்தைச் சுற்றிப் பார்க்கும் பழக்கத்தோடு இந்தப் பழக்கத்தையும் கடை பிடிக்க வேண்டும்!

நமது பெரும் மதிப்புக்குரிய தலைவர் மணிமொழியார் அவைத் தலைவராக வந்திருக்கிறார்! முதிர்ந்த அனுபவமும் நீண்ட நாள் பொதுப் பணியும் அவருடைய தியாகத் தன்மையையும் நம்மை எதையும் சொல்லவிடவில்லை!

இந்த மாவட்டக் குழுவை நிர்வகிக்கும் பொறுப்பை பொறுப்புள்ள பெரியவர் ஏற்றிருப்பதால் நாம் ஏதும் கவலைப்படவேண்டியதில்லை!

க. அன்பழகன்
என். வி. நடராசன்
இரா. செழியன்
அலமேலு அப்பாத்துரை
சத்தியவாணி முத்து
டி. கே. பொன்னுவேலு
டி. வி. நாராயணசாமி
வி. முனுசாமி

(12-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்களுக்கு முக்கிய அறிவிப்பு

விரைவில் தின இதழாக்கும் நோக்கத்தோடு **மாலை மணி** புதிய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் முன்பணம் கட்டாமல் விற்பனையாளராக இருந்துவரும் நண்பர்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் இதழ் ஒன்றுக்கு 75 புதிய காசுகள் வீதம் முன்பணம் கட்டி தங்கள் விற்பனை உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும்! அப்படி செய்யாவிட்டால் முன்பணம் கட்டுபவர்களுக்கு விற்பனை உரிமை அளிக்கப்படும்.
பட்டியல் தொகையையும் உடன் அனுப்பித்தர வேண்டும்.

நிர்வாகி,
மாலைமணி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கவலைப்படவேண்டும்? திட்டினவர்கள் போற்றவில்லையா? புகழ் பாடவில்லையா? கொள்கைகளை விற்றுண்ணும் கொலை பாதகர்கள் எதையும்தான் பேசுவார்கள்; அதற்காகவா நாம் ஆத்திரப்பட வேண்டும்?

நாகரீக நாடு என்று சொல்லி, நாகரீக அரசியல்வாதிகள் என்று நினைத்துச் சென்றாயே, நீ திரும்பி வந்தாயா?

நாடு பெற்ற விடுதலை வரலாற்றுக் காதையை கேட்கச் சென்றாயே—கேட்டாயா? இல்லையே—நீயல்லவா விடுதலை பெற்று சென்றுவிட்டாய்!

ஐயோ! உன்னை நினைக்கும்போது எங்கள் உள்ளம் கொதிக்குதடா! நீ எப்படியடா மாண்டாய்? அடிபட்டு மாண்டாயா உதைபட்டு மாண்டாயா? உன் உயிர் எந்தப் பக்கமடா சென்றது? உன் மூச்சு எப்படியடா நின்றது?

கலங்கும் கண்களுக்கு என்ன ஆறுதல் கூறுகிறாய்? உடைந்த உள்ளங்களுக்கு நீ என்ன தேறுதல் சொல்லுகிறாய்?

"என்னுடைய உயிர் இந்த நாட்டை விடுவிக்கும்" என்று கூறுகிறாயா?

"நான் விட்ட உயிர் இந்த இலட்சியத்தை நாடெங்கும் பரப்பி உன்மத்தர்களை அழிக்கும்" என்று சொல்லுகிறாயா? உண்மைதான், அதுவும் உண்மைதான்!

கொள்கையை வளர்ப்பதற்காக உயிர் நீத்த உத்தமனே! உன் ஆசை நிறைவேறும்—கவலைப்படாதே!

கொள்ளை போன கொள்கை வீரா! உன் இலட்சியம் நிறைவேறும், அதனால் உன் நாடும் வாழும்—கொஞ்சமும் கவலைப்படாதே!

உன்னைப் போன்ற உத்தமர்கள் இந்த ஏராளம், மிக ஏராளம்! அடிபட்டு, உதைபட்டு செத்து மடிய இந்த இலட்சக் கணக்கில் வரிசை வரிசையாக நின்று கொண்டிருக்கிறார்கள்! நீ, கவலைப்படாமல் சாவு! உன்னுடைய நாடு வாழும்—நீ நிம்மதியாக சாவு!

நீ, நாட்டைப்பற்றிக் கவலைப்படாதே! உன்னைப் போன்ற வீரர்கள்தான் நாங்களும்—நாட்டை மீட்டுத் தருவோம், நம் அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றி வைப்போம்! கவலைப்படாமல் நிம்மதியாகச் சாவு!

உன்னுடைய சாவு எங்களுக்கெல்லாம் வீரமூட்டும், உணர்ச்சியைப் பெருக்கும் — சந்தேகப்படாதே! கொள்ளை போன கொள்கை வீரா! இது சத்தியம், இது சத்தியம்!

மாநாட்டுத் தலைவர்களெல்லாம் மேடையில் வரிசை, வரிசையாக அமர்ந்திருந்தனர்! மிகப் பிரம்மாண்டமான பந்தலில் பெண்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது!

"ஆண்களுக்கு மட்டும்" என்று ஒதுக்கி விடப்பட்டிருந்த இடத்தில் ஆண்மக்கள் வியப்போடு மேடையை நோக்கிய வண்ணம் அமர்ந்திருந்தனர்.! ஆனல் அந்த ஆயிரமாயிரம் ஆண்களோடு ஒருவனுகக் கலந்திருந்த அந்த உதயசூரியனுடைய கண்கள் மட்டும், சுற்றிச் சுற்றி நாலா பக்கங்களையும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன! அவனுடைய உள்ளமும் ஒரு நிலையில் இல்லை! எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது!

"மாநாட்டிற்கு வருவதாகச் சொன்னுளே ... வரவில்லையோ—வராவிட்டால்..." அவனுடைய உள்ளம் தவியாய்த்தவித்ததுக் கொண்டிருந்தது! ஒரு நிமிடம் உட்காருவான், மறு நிமிடம் எழுந்து நிற்பான்...மறுபடியும் உட்காருவான், மறுபடியும் எழுந்து நிற்பான்! அவனுக்குப் பின்னுலே இருப்பவர்கள் 'உட்காரு, உட்காரு" என்று சத்தம் போடுவார்கள்! அவன் மீண்டும் உட்காருவான்! அவனுடைய எண்ணம் அலைபாய்ந்துக் கொண்டிருந்தது!

"மாநாடு இன்னும் ஐந்து நிமிடத்தில் ஆரம்பமாகிவிடும், தயவு செய்து அமைதியாக இருங்கள்" என்று ஒரு பெணமணி அமைதியை நிலைநாட்டி விட்டுப்போய் உட்கார்ந்து கொண்டார்!

"மாநாடு ஆரம்பமாகப் போகிறதாமே, அவளை இன்னும் காணுமே" என்று அவனுடைய உள்ளம் மேலும் தவிக்கத் தொடங்கிற்று!

"சகோதரிகளே! சகோதரர்களே! நான், தலைவரை முன்மொழிந்து பேசுவதற்காக உங்களிடையே வந்து நிற்கிறேன்! இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்க இருக்கும் எங்கள் தலைவியைப்பற்றி நான் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கத் தேவையில்லை. பெருங்குடியிற் பிறந்தவர், பெருமையோடு வாழ்பவர், பல பெரும் பணிகளைச் செய்தவர்! இந்த பெருமைக்குரியவரின் தலைமையில் நாம் திரண்டு நிற்பது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்' இங்கே திரண்டு நிற்கும் மாதர் குலத்துப் பெரும் படைக்கு தலைமை தாங்கி நல்வழி காட்ட வேண்டும் என்று கூறி நான் முன் மொழிகிறேன்."

"தோழியர் பூங்கோதை முன் மொழிந்ததை நானும் ஆமோதிக்கிறேன். நமமுடைய தலைவியாரை நாம் மட்டும் பாராட்டி புகழ்ந்தால் போதாது ... பெண் குலத்துத் தலைவியை பெண்குலமே பாராட்டுவது தற்பெருமைக் கொப்பாகும்; நம்முடைய தலைவியாரை ஆண் குலமும் பாராட்டவேண்டும்; எனவே இந்த மாநாட்டிற்கு தனி அழைப்பு விடுத்து பேச்சாளராக அழைக்கப்பட்டிருக்கும் தோழர் உதய சூரியன் அவர்களையும் வழிமொழிய அழைக்கிறேன்.

தோழியர் மான்விழியின் பேச்சைக் கேட்டு உதயசூரியன் திடுக்கிட்டான்! அறிமுகமில்லாத ஒருவரை எப்படிப் பாராட்ட முடியும்; எதைச் சொல்லி பாராட்டுவது" என்று மனகிலேசமடைந்தான்! அதற்குள் மேடையிலிருந்த தோழியர் ஒருவர் "இந்தக் கூட்டத்தில் உதயசூரியன் இருந்தால் மேடைக்கு அழைக்கப்படுகிறார்" என்று கூறினர்!

கூட்டத்திலிருந்த உதயசூரியன் எழுந்தான்! ஒரு முறை தன் இதயம் கவர்ந்த கள்ளி வந்திருக்கிருளா என்று நாலா பக்கங்களிலும் திரும்பித் திரும்பி பார்த்து விட்டு மேடைக்குச் சென்ருன்!

ஒரு தோழியர் ஒலிபெருக்கி முன்வந்து—"இப்போது உதய சூரியன், தலைவரை வழிமொழிவார்" என்று கூறிவிட்டு சென்ருர்!

உதயசூரியன் ஒலிபெருக்கி முன்பு வந்து நின்று, தொண்டையை ஒரு கனைப்பு கனைத்து, தன் கவர்ச்சியான குரலை கொஞ்சம் சரி செய்து கொண்டான்! "அன்புமிக்க சகோதரிகளே! அரும்பெரும் புதல்வர்களை ஈன்றெடுத்த அருமைத் தாய்மார்களே" என்று அவன் தொடங்கியது அந்தக் கூட்டம் நிசப்தத்தில் ஆழ்ந்து அமைதியைத் தழுவிக் கொள்ள ஆரம்பித்தது! அங்கு கூடியுள்ள தாய்மார்களின் கையொலியின் ஓசை நின்றவுடன் அவன் பேச ஆரம்பித்தான்! அவன் பேச ஆரம்பிப்பதற்கு முன்பு அவனுக்குக் கிடைத்த அந்த ஒரு நிமிட நேரத்தில் மேடையை ஒரு முறை தன் கூரிய கண்களால் வட்டமிட்டுக் கொண்டான்! அவனுடைய

(7ம் பக்கம் பார்க்க)

குண்டர்களை அடக்குங்கள்!
ரௌடிகளை ஒடுக்குங்கள்!

தேர்தல் நெருங்க, நெருங்க—மக்கள் சக்தியை இழந்து உயிருக்குப் போராடி மரணப் படுக்கையில் கிடக்கும் காங்கிரஸ் ரௌடித்தனதால், தன் உயிரை மீட்கத் துடி துடிக்கிறது!

கொள்கையால் வெல்ல முடியாத நம்மை கோடரியால் வெட்டிப் பிளக்க எண்ணுகின்றனர். கத்தியைத் தூக்குகின்றனர், கட்டாரியால் நம் உயிரைக் குடிக்க எண்ணுகின்றனர்.

குடந்தையிலே கொள்கை வீரன் கொல்லப்பட்டான். இந்த வேதனைச் செய்தி மறைவதற்குள்ளே, சென்னையிலே ரௌடித்தனம் நடந்திருககிறது. துவரங் குறிச்சியிலே ஒரு கழகத் தோழர் தாக்கப் பட்டிருக்கிருர். இதற்கெல்லாம் யார் பொறுப்பு? எவர் பொறுப்பு?

சென்னை, சிந்தாதிரிப்பேட்டையிலே இரு கழகத் தோழர்களை நையப் புடைத்திருக்கின்றனர்.

லிங்கபூஷணம், திருநாவுக்கரசு இருவரும் கூலிப்படைகளால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

தாக்கப்பட்ட தோழர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கிருர்கள். தாக்கிய குண்டர்களோ "தன்னுன" பாட்டுப் பாடி தெருவில் திரிகின்றனர். போலீசாரோ, கண்டும் காணுமல் கடமையை மறந்து நிற்கின்றனர்! காரணம் காங்கிரஸ்காரர்களாம்—அதுவும் மண்டல காங்கரஸ்காரர்களாம்!!

அதனுல் போலீஸ் அதிகாரிகளும் அவர்களை கைது செய்ய அஞ்சுகிருர்கள் போலும்.

காங்கிரஸ்காரர்கள் இனி எதைச் செய்தாலும் இந்த நாட்டில் கேட்பதற்கு நாதியே இருக்காது என்று எண்ணுகிருேம்.

தேர்தல் வர இன்னும் இரண்டாண்டு காலம் இருக்கிறது. அதற்குள் உங்களுக்கு ஆற்றல் இருக்குமானுல் திறமை இருக்குமானுல் மக்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்று ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுங்கள்.

அதற்குத் திறமையில்லை என்ருல், அதற்கு வழியும், வகையும் இல்லையென்ருல் வீட்டை நோக்கச் செல்லுங்கள்—உங்களுடைய மாஜி வேலைகளைக் கவனியுங்கள்.

கப்பும், கடப்பாறையும்—கத்தியும், அரிவாளும், ஈட்டியும், பிச்சுவாவும் உங்களுக்கு நிச்சயமாகத் துணைபுரியாது!

நாட்டிலே அமைதி நிலவ வேண்டுமானுல், மீண்டும் நீங்கள் நாடாள வண்டுமானுல் குண்டர்களை அடக்குங்கள்! ரௌடிகளை ஒடுக்குங்கள்!

(6ம் பக்கத் தொடர்ச்சி

கண்கள் எதை தேடிற்றோ அந்த புதைபொருள் கிடைத்துவிட்டது! தன் இதயத்தில் ஓவியமாகத் தீட்டிக் கொண்டிருந்த அந்த அழகுத் தெய்வம் அங்கிருப்பதைக் கண்டான்! அவன் உள்ளத்திலே தனி உற்சாகம் பிறந்தது! தன் எண்ணத்திலே ஒரு தனி தெளிவு ஏற்பட்டது! தன் கண்களிலே ஒரு தனி பிரகாசம் ஜொலித்ததை அவனே கண்டான்! மீண்டும் ஒரு முறை, அவளுக்காக தன் தொண்டையைக் கனைத்துக் காட்டினான்! படிப்புக் கலையாத சட்டையை கொஞ்சம் சரி செய்து கொண்டான்! இனியும் சேஷ்டை செய்வது நகைப்புக் கிடமாகி விடும் என்று எண்ணினானோ என்னவோ உடனே பேச ஆரம்பித்தான்!

"இங்கு கூடியுள்ள இந்த மாதர் மாநாட்டிற்கு தலைமை தாங்கும் அம்மையாரைப்பற்றி, சிறப்புரையாற்றிடலர் புகழ்ந்தார்கள்! "பெருமைக்குரியவர், பெருங்குடியில் பிறந்தவர்" என்றெல்லாம் ஒரு அம்மையார் புகழ் மாலை சூட்டினார்கள்!"

"அம்மையாரை நான் பார்த்ததில்லை ஆனால் அவருடைய பளிங்கு உள்ளத்தைப்பற்றி நான் கேட்டிருக்கிறேன்"

"அம்மையாரை நான் கண்டதில்லை, ஆனால், அவருடைய கருத்து என்ன என்பதை நான் கண்டிருக்கிறேன்!

"அந்த அம்மையார் யாரென்பதை யானறியேன், ஆனால் அவருடைய எண்ணம் யாது என்பதை நான் அறிவேன்!"

அவருடைய சிரிப்பு தவழும் முகம் இந்த நாட்டுப் பண்மைக்கு எடுத்துக் காட்டு என்றார்கள், அவருடைய அகன்ற நெற்றி, ஆண்களின் அறிவுக்கு விடும் சவால் என்றார்கள்! "உங்களுடைய மான்விழிப் பார்வையால் மாதர்களுக்குக் கட்டளை விடுங்கள், மாற்றான் ஆட்சியை மண்டியிட வைக்கிறோம்" என்று பலர் ஆண்களைப்போல் வீரமுடன் பேசியதையும் கேட்டேன்! பெண்களின் வீரத்தை இன்றுதான் கண்டேன்! இத்தனை வீரமுள்ள பெண்கள் ஆண்களைக் கண்டால் அடிமையாவதேனோ என்றுதான் எனக்குப் புரியவில்லை!

"இல்லை, இல்லை" என்று மாநாட்டுப் பந்தலில் அமர்ந்திருந்த தாய்மார்கள் குரல் கொடுத்தார்கள்!

"அப்படி என்றால் இனி பெண்களெல்லாம் திருமணமே செய்து கொள்ளக் கூடாது" என்று உதயசூரியன் பேசஆரம்பித்தவுடன் — "மாட்டோம், மாட்டோம்" என்று மீண்டும் அவர்கள் குரல் கொடுத்தார்கள்!

"அப்படியென்றால் நீங்கள் நீங்களெல்லாம் மணிமேகலையாகி அட்சய பாத்திரத்தை உண்டாக்கப் போகிறீர்களா" உதயசூரியன் இதைச் சொல்லி வாய் மூடுவதற்குள் "நீங்களெல்லாம் காவியணிந்தால், தாங்களெல்லாம் கன்னிகா மடத்திற்குச் செல்லத் தயார்" என்று அங்கு கூடியிருந்த பெண்களெல்லாம் கோஷம் போட ஆரம்பித்தார்கள்!

மகாநாட்டில் குழப்பம் கொஞ்சம் கொஞ்சமாக தலை நீட்ட ஆரம்பித்தது!

உடனே மாநாட்டுத் தலைவி சற்குண எழுந்து "மன்னிக்க வேண்டும், அவரைப் பேச விடுங்கள்" என்று கூறினார்! அப்போதும் கூட்டத்திலிருந்த பெண்கள "முடியாது. முடியாது" என்று முழக்கம் செய்தார்கள்!

"நான் இந்த மாநாட்டிற்குத் தலைவி — கட்டளையிடுகிறேன், அவரைப் பேச அனுமதியுங்கள்" என்று புன்னகைத் தவழ கூறினார்! "பேசட்டும், பேசட்டும்" என்று அங்கு கூடியுள்ள பெண்கள் கூறினார்கள்!

உதயசூரியன் திடுக்கிட்டான்! 'இவளா சற்குண, இவளா மாநாட்டுத் தலைவி, நேற்று ரயிலில் சந்தித்தபோது ஏதும் அறியாதவள்போல பேசினாளே" என்று வியப்படைந்தான்! மூளை கொஞ்சம், கொஞ்சமாக குழம்ப ஆரம்பித்தது! சமாளித்துக்கொண்டு உதயசூரியன் பேச ஆரம்பித்தான்.

"இந்த குழப்பத்திற்குப் பிறகு என்னால் பேச முடியவில்லை! உங்கள் அன்புத் தலைவியை, இல்லை இல்லை, என்னுடைய அன்புத் தலைவியை தலைமை தாங்க அழைக்கிறேன்" என்று கூறிவிட்டு மேடையில் உட்கார்ந்தான்!

மாநாட்டுத் தலைவி எழுந்தார்! அங்குக் கிளம்பிய கையொலி மாநாட்டையே அதிர வைத்தது!

"சகோதரிகளே! மற்றும் இங்கு கூடியுள்ள நண்பர்களே, இந்த மாநாட்டில் சிறு குழப்பம் ஏற்பட்டதற்காக நாம் கட்டாயம் வருத்தப்பட்டுத்தான் ஆக வேண்டும்! நம்மிடம் இந்த சிறு விஷயத்தில்கூட பொறுமையைக் காட்டவில்லை என்றால் நாம் பெரும் பெரும் காரியங்களை எப்படி சாதிக்க முடியும்!

இங்கு பேசிய தோழர் உதயசூரியன் என்ன தவறாகப் பேசிவிட்டார் என்று கருதுகிறீர்கள்? பெண்கள், ஆண்களுக்கு அடிமையாகிறார்களா அல்லது ஆண்கள்தான் பெண்களுக்கு அடிமையாகிறார்களா என்ற விஷயம் அவருக்குப் புரிய நியாயமில்லை! அவர் அந்த உலகத்திற்கு புதிது என்று எண்ணுகிறேன்! நான் இப்படிக் கூறுவதால் அவர் ஏதும் என்னைத் தவறாக நினைக்கக் கூடாது! உதயசூரியன் சிறந்த பேச்சாளராக இருக்கலாம், உயர்ந்த எழுத்தாளராகவும் இருக்கலாம்! ஆனால் இந்த உண்மை, அனுபவத்தில், தெரிந்துகொள்ள வேண்டியதாகும்! அவருக்குக் காவிமேல் ஆசை இருக்கலாம்; கமண்டலத்தின் மீது பற்றிருக்கலாம்! அதனால் நாம் கன்னிகா மடத்திற்குச் செல்ல வேண்டும் என்று பொருளா? அல்லது மணிமேகலையாகி அட்சய பாத்திரத்தை உண்டாக்க வேண்டும் என்று அர்த்தமா? நமக்கு இந்த சபதம் தேவையில்லை— அவர்கள் வேண்டுமானால் அந்த சபதத்தை மேற் கொள்ளட்டும்!

"நம்முடைய நோக்கம் மாதர்கள் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும் மாதர்களால் இந்த நாடு நல்வாழ்வு பெறவேண்டும்! நாட்டுக்கு வந்துள்ள ஆபத்துகளை ஒழித்துக் கட்ட நாமெல்லாம் புறப்பட வேண்டும்! இதற்காக மாதர்களை அழைக்கிறேன்! மாதர்களோடு பங்கு கொண்டு நாட்டை விடுவிக்க ஆண்களையும் அழைக்கிறேன்! "இல்லை, இல்லை எங்களுக்குக் காவிதான் வேண்டும்" என்று அவர்கள் கூறுவார்களானால் தாராளமாகப் போகட்டும்! தோழர் உதய சூரியனுக்குக் காவி வேண்டுமா? அல்லது கனி மதுர வாழ்க்கை வேண்டுமா? என்பதை நாம் கேட்க வேண்டாம்! அவரே அதை முடிவு செய்து கொள்வார்! நாம்படையைத் திரட்டுவோம், தனித்தே நின்று போராடுவோம், வெற்றி பெறுவோம்" என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்!

"எங்கள் தலைவி சற்குண வாழ்க, எங்கள் தலைவி சற்குண வாழ்க" என்ற ஒலியோடு மாநாடு முடிந்தது!

உதயசூரியனுடைய உள்ளத்தில் ஏற்பட்ட குழப்பம் மட்டும் முடிந்ததாகத் தெரியவில்லை!

"காவி வேண்டுமா? கனி மதுர வாழ்க்கை வேண்டுமா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டே நடக்கலானான்

(தொடரும்)



மொழியைக் காக்கப் பாடுபடுவது அரசியலில் ஈடுபடுவதாகுமா?

நீங்கள் அன்று மாணவர்களை வைத்து அழிவு வேலை செய்தீர்களே, அப்படியா நாங்கள் செய்கிறோம்?

"அரசியல்" என்ற வேலியைப் போட்டு மாணவர்களின் உணர்ச்சியை அடக்காதீர்கள்!

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கள், அவனுடைய சட்ட முறையைமட்டும் பின்பற்றலாமா? இங்கேதான் இருக்கிறதுபெரும் சூழ்ச்சி!

அவர்களுக்கு வெள்ளைக்காரன் மீதோ, அல்லது அவனுடைய ஆங்கில மொழி மீதோ துளியும் வெறுப்பில்லை! அவர்களுக்கு ஆங்கிலம் பிடிக்காத காரணமெல்லாம் மண்ணாசை ஒன்றுதான்!

ஆங்கில மொழி இருந்தால் இந்தியாவை எந்தக்காலத்திலும் ஒன்றாக இணைக்க முடியாது, இந்தியாவை எந்த காலத்திலும் ஒற்றுமைப்படுத்த முடியாது! இந்திய மக்களை ஒரு இன மக்களாக, ஒரு மொழி பேசும் மக்களாக, ஒரு பண்பாட்டை பின்பற்றும் மக்களாக, ஒரு நாகரீகம் படைத்த மக்களாக ஆக்க முடியாது!

ஆங்கில சட்ட அமைப்பு முறையைப் பின்பற்றும் வடவர்கள் ஆங்கில மொழியையும் பின்பற்றினால் தமிழன் இந்தியனாக இருக்கமாட்டான் —அவன் தமிழனாகத்தான் இருப்பான்! தெலுங்கன் இந்தியனாக இருக்க மாட்டான்— அவன் தெலுங்கனாகத்தான் இருப்பான்! பஞ்சாபியும், மராட்டியர்களும் அப்படியேதான் இருப்பார்கள்! எல்லோரும் அப்படி அப்படியே இருந்தால் இந்தியாவை ஒரு குடையின் கீழ் ஆள முடியாது! இவ்வளவு பெரிய விளக்கத்தைத்தான் அவர் சுருக்கமாகச் சொல்லி இருக்கிறார் — "ஆங்கிலத்தை எங்கள் மீது திணிக்காதீர்கள்" என்று!

இந்தச் சுருக்கத்தில் அடங்கி இருக்கும் பெரும் விளக்கத்தை மாணவர்கள் மிகத் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்! அதன் விளைவுதான் அவர்களுடைய உள்ளம் கொதித்தெழ ஆரம்பித்தது!

வருங்காலத்தைக் கட்டியாள இருக்கும் மாணவர்களுக்கு நம்மைவிட பெருங்கவலை இருக்கத்தான் செய்யும்!

நம்முடைய தலைமுறை அனேகமாக பாதிக்குமேல் ஒழிந்து விட்டது! இந்த சொச்ச காலத்தில் நாம் ஏன் அடிமையைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்! ஏதோ பதவி, பட்டத்தோடு நமது தலைமுறையை முடித்துக் கொள்ளலாம்!

ஆனால் மாணவர்களுடைய தலைமுறை இப்போது தான் ஆரம்பமாகிறது! அவர்கள் அனுபவிக்கப் போகிற பின்விளைவுகளைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கத்தான் செய்வார்கள்!

நம்முடைய வாழ்க்கை தான் ஏதோ சத்திரத்துச் சாப்பாட்டோடு ஒழிந்து விட்டது! அவர்களுடைய வாழ்க்கையுமா அப்படி இருக்கவேண்டும்!

நாம் தான் வெள்ளைக்காரனிடம் பாதி காலத்தையும், வடவர்களிடம் பாதி காலத்தையும் கழித்து விட்டோம்! அவர்களாவது சுதந்திர வீரர்களாக வாழக் கூடாதா?

இது ஏன் நமது நிதி அமைச்சருக்குப் பொறுக்கவில்லை என்பதுதான் புரியவில்லை!

பாபு ராஜேந்திரப் பிரசாத் சென்னையில் பேசிய பேச்சு மாணவர்களுக்குப் பெரும் அச்சத்தை அளித்திருக்கிறது! எனவே, அவர்கள், வருங்காலத்தை எண்ணி எழுச்சி பெற்று எழுந்தார்கள்! சென்னையில் முரசு கொட்டிக்கிளம்பினார்கள்! இதில் என்ன தவறு இருக்கிறது!

மாணவர்களின் இந்தக் கிளர்ச்சியை அரசியல் என்று வர்ணிக்கிறார்! அரசியல்காரர்கள் தூண்டிவிட்டதாக எண்ணுகிறார்! ஒரு மொழியைப் படிக்க மாட்டோம் என்று கூறினால் அது அரசியலாகுமா? ஒரு மொழியை கற்றுக் கொள்ள மாட்டோம் என்று கிளர்ச்சி செய்தால் அது அரசியல்வாதிகளின் தூண்டுதல் என்று பொருளா?

இன்றைய நிதி அமைச்சருக்கு —இல்லை, இல்லை—இன்றையக் கல்வி அமைச்சருக்கு இந்தச் சந்தேகம் வரக் காரணம் என்ன? மாணவர்களுக்குச் சொந்த புத்தியே கிடையாதா?

இனிமேல் நமது நிதி அமைச்சர் இந்தியைப் படிக்கப்போவதில்லை — மாணவர்கள் தான் படிக்க வேண்டும்' அவர்களுக்குத்தான் அதைப்பற்றிப்புரியும்; தெரியும்!

ஒரு மொழிக் கிளர்ச்சியை அரசியல் கிளர்ச்சி என்று வர்ணிப்பது எந்த அகராதியிலிருந்து எடுத்தாரோ நமக்குத் தெரியவில்லை! எந்தப் பல்கலைக் கழகம் அந்த அகராதியை வெளியிட்டதோ அதுவும் நமக்குப் புரியவில்லை!

'அரசியல், அரசியல்" என்று இன்று தவிக்கிறவர்கள் அன்று தவிக்காத காரணம் என்ன? அண்ணாமலை நகரில் பெரும் கிளர்ச்சி செய்த பால தண்டாயுதத்தை அன்று போற்றினார்களே, புகழ்ந்தார்களே, மலர் மாலை சூட்டி மகிழ்ந்தார்களே! காரணம் என்ன?

பால தண்டாயுதம் தேவை, ஆனால் அதே நேரத்தில் ஒரு மதியழகன் தேவையில்லையா? ஒரு சோமசுந்தரம் கூடாதா? ஒரு பொன்னுவேலு ஆகாதா?

இன்று பெரும் பதவியில் வீற்றிருக்கும் திரவியமும், குழந்தைவேலும் கரங்களிலே கற்களை ஏந்தி போலீஸ் காவலர்களைத் தாக்கினார்களே! அது என்னவாம்? அரசியலா? அல்லவா?

மந்திரி ராமையா — இல்லை, மாணவர் ராமையா, தெருத் தெருவாக கோஷம் போட்டுச் சென்றதும், கொடி தூக்கி அலைந்ததும், "காந்தி வாழ்க, நேரு வாழ்க" என்று வாய்கிழிய கத்தியதும், தண்டவாளத்தைப் பெயர்த்ததும், தந்திக் கம்பிகளை அறுத்ததும் — இரவோடு இரவாய் தபால் நிலையங்களை கொளுத்தியதும், உமைத் திணியை கொளுத்தியதும் எந்த வகையைச் சார்ந்தது! அரசியல் வகையா? அல்லது பதவிக்கு செய்த வகையா?

பள்ளியை பகிஷ்காரம் செய்துவிட்டு மாணவர்களைத் தெருவிலே நிற்க வைத்து வெள்ளைக்காரனுடைய துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலி கொடுத்தீர்களே! இது என்ன அரசியலா? அல்லது பொழுதுபோக்கு விளையாட்டா?

உங்கள் பேச்சுக்குத்தான் என்ன பொருள்? என்ன அர்த்தம்?

கைராட்டைக் கொடி ஏற்றினால் மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளலாம்... கறுப்பும் சிவப்பும் கலந்த கொடியை உயர்த்தினால் மாணவர்களுக்கு அரசியல் கூடாது! இது என்ன நாடோ! இது என்ன ஊரோ!

எழுச்சி பெற்றுவிட்ட மாணவர்ப்படையை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது!

மொழியைக் காத்திடப் புறப்பட்ட மாணவர்ப் படையைப் பாராட்டுகிறோம், போற்றுகிறோம், புகழ்மாலை சூட்டி வரவேற்கிறோம்!

இந்தி வந்தால் ஆபத்து, அது உங்கள் பிற்கால வாழ்வுக்கு பெரும் ஆபத்து! எழுச்சி பெறுங்கள், உணர்ச்சி பெறுங்கள், அடிமைத் தளையை உடைத்தெறியுங்கள் —விடுதலை நாட்டில் தலை நிமிர்ந்து வாழுங்கள்!

வருந்துகிறோம்

நமது "மாலை மணி" அலுவலகத்தில் பணி புரிந்து வரும் A. மாசிலாமணியின் பாட்டியாரும், காமேஸ்வரம் பட்டம்மாளின் தாயாருமான திருமதி பாக்கியம் அம்மாள் இயற்கையடைந்தார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். பாட்டியாரை இழந்து துயரடைந்துள்ள திரு மாசிலாமணிக்கு நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

சட்டமன்றத்தில் ஏழைகளுக்காக நாங்கள் செய்த பணிகள்!

அண்ணாவின் தலைமையில் அரும்பணிகள் ஆற்றியுள்ளோம்!

15 பேர்களாக இருந்தாலும் நாங்கள் ஆற்றிய நன்மைகள் பலப்பல!

என் தொகுதி மக்களின் நன்மைக்காக என்னாலான பணிகள் செய்திருக்கிறேன்

சட்டமனறத்தில் தனது சாதனைகளைப்பற்றி இருசப்பன் விளக்கம்

"அர்த்தமற்ற அடுக்கு மொழிகளை மக்களிடையே கூறி அவர்களின் உள்ளத்திலே தவறான வித்தை ஊன்றி செல்வாக்கைப் பெற்ற இந்த தி. மு. கழகத்தினர், சட்ட சபைக்குச் சென்று சாதிக்கப் போவது என்ன ?... இவர்களிடம் சாதனைக்குரிய திறமை என்ன இருக்கிறது?" என்றெல்லாம் பேசி வந்த 'இருட்டறை வாசிகள்' இன்று அடி வயிற்றிலே 'அப்போ அய்யோ என்று அடித்துக் கொள்ளும் அளவுக்கு நமது சட்டசபை சாதனை வளர்ந்தும், அதை மக்கள் அறிந்து பாராட்டியும் வருவதைப் பகுத்தி விரத்தலே இதன் நோக்கமாகும்.

1957-ஆம் ஆண்டில் நாடெங்கும் நடைபெறப் போகும், பொதுத் தேர்தலில் தி. மு. கழகமும் ஈடுபட வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்பு கொண்ட தீர்மானத்தை திருச்சி மாநாட்டிலே நிறை வேற்றிய உடன்— இரு பெரும் ஆச்சரியங்கள் நடைபெற்றன! ஒன்று நாட்டு நலனிலே அக்கறை கொண்ட நல்லவர்கள், பெரியவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள், புலவர்கள் இப்படிப் பொது மக்கள் பலரும்— வாழ்த்தினர்; வணங்கினர்.— கண்ணீர் விட்டு கஞ்சிக்குத் தவித்த காலம் மறையப் போகிறது, புது வசந்தம் பூக்கப் போகிறது என்ற பெரு மகிழ்ச்சியால்!

இரண்டாவதாக— பருத்த உடலை தூக்கிக் கொண்டு, நீண்ட கதா சட்டையை அணிந்து கொண்டு பணத்திலே புரளும் ஜெய் ஹிந்த் வாதிகளான பாரத மாதாவின் பவித்தரர்கள்" திடுக்கிட்டு எழுந்து கொட்ட கொட்ட விழித்துப் பார்த்தனர். கிலி கொண்டனர்,...

அவர்கள் கிலிகொண்டதைப் போலவே 17 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்; தங்களின் ஒருமித்த உளப்பாங்கை வாக்கெடுப்பு மூலம் தி. மு. கழகத்திற்கு அளித்து ஏகாதிபத்திய வடவருக்கு சவுக்கடி கொடுத்தனர்!—

15 பேர்கள் தி. மு. கழகத்தின் சார்பில் சட்ட மன்றத்தில் நுழைந்தனர். அவர்களில் நானும் ஒருவன். நானும் ஒருவன் என்று கூறுவதை விட தென்னாட்டிற்கு வளந்தரும் பெரு நதி ஒன்றுடன் இணைந்திருக்கும் சிற்றாறு என்று கூறிக் கொள்வதிலே நான் பெரிதும் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

பதினைந்து பேர்களாகிய நாங்கள் சட்ட மன்றத்திலே அமர்ந்த உடன் ஆட்சியாளர்கள் எங்களை நோக்கும் கண்ணோட்டம் மிக மிக விசித்திரமானது; வேடிக்கையானது!

அது மட்டுமல்ல அறிஞர் அண்ணாவும் பேராசிரியர் க. அன்பழகனும் சட்ட மன்றத்திலே, காவடி தூக்கும் அமைச்சர்கள் முன்பு எழுந்து — நாவினிக்கும் தமிழைப்பற்றி — தூத்துகுடித் துறைமுகத்தைப் பற்றி—பாலாற்று நீர் பாசனத்தைப் பற்றி ஆட்சி மொழியைப்பற்றி—குடிசை வாழ்வோரைப் பற்றி— குடியிருப் போரைப் பற்றி— சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்தைப் பற்றி, நெய்வேலி நிலக்கரியைப் பற்றி மேலதிகாரிகளின் லஞ்ச ஊழலைப் பற்றி ஒளிவு மறைவின்றி, உள்ளதை உள்ளப்படியே நாட்டு மக்களின் சார்பிலே கூறும் போது—அந்த நல்லவர்கள்— நாடாள வந்த திறனமைச்சுகள் கெக்கலிக்கின்றன. கேலி மொழி பேசுகின்றன. ஏன்?

நாம் வாதாடி நாட்டு மக்களுக்கு நல் வாழ்வளித்து விட்டால் ஊரெங்கும் ஒரே பேச்சாகி விடுமே? வரும் தேர்தலில் ஓட்டு வாங்க வீடு வீடாக செல்ல முடியாதே! என்றவயிற்றெரிச்சல்—பொச்சரிப்பே காங்கிரஸ் காரர்களின் அசட்டுத்தனத்திற்கும், அச்சங்கொண்ட ஆணவத்திற்கும் காரணமாகும்.

சென்ற ஆண்டு சென்னை அரசு தீர்மானித்தது "அழுகும் பொருள்களுக் கெல்லாம் வரி விதிக்க வேண்டுமென்று!" இதனால் மக்கள் ஏற்கப் போகும் வரிச் சுமையையும், வியாபாரிகள் அடையும் நஷ்டத்தையும் கண்டு நாடெங்கும் கொதிப்பு ஏற்பட்டது. கண்டன தீர்மானங்களும், கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தினோம். கடை அடைப்பு நிகழ்ந்தது. சட்ட மன்றத்தில் நாங்கள் நிலைமையை மிக விளக்கமாகத் தெரிவித்து சமாளிக்க வேண்டுமென்று கூறினோம். காலம் கடந்தாலும் சென்னை அரசு பணிந்தது. வரிச் சுமை அகன்றது.

இப்படி சிந்திக்கும் ஆற்றலும், மன உறுதியும் இல்லாத சர்க்கார் சட்ட மன்றத்தில் நாங்கள் இருப்பதால்தான் ஏழை மக்களின் தலையிலே எண்ணற்ற வரிப் பளுவை சுமத்தாமல் இருந்து வருகிறது.

நான் சட்ட மன்றத்திற்கு சென்றபின் பன் முறை மக்களுக்காக வாதாடி இருக்கின்றேன். ஒரு முறை, நாடெங்கும் மலிந்து கிடக்கும் ஜாதி வேறுபாட்டை நீக்கி காந்தியார்கண்ட இன்பக் கனவை நிறைவேற்ற வேண்டும். என்று வற்புறுத்தியுள்ளேன். இந் நாட்டு மக்கள் நியாயமான சமத்துவ வாழ்க்கைத் தரத்தைப் பெற வேண்டும் என்று சுட்டிக் காட்டியிருக்கிறேன். சட்ட மன்றம் நடைபெறும் நாட்களில் தி. மு. கழகத்தைச் சேர்ந்த நாங்கள் பேசாத நாட்களோ, கேள்வி கேட்காத நேரங்களோ இல்லையென்று உறுதியாகச் சொல்லலாம்.

எனது தொகுதியைச் சேர்ந்த சிவகங்கபுரம் என்ற கிராமத்தில் நடந்து வரும் சர்க்கார் கூட்டுறவு பண்ணையின் நிலையையும், அந்தப் பகுதி ஏழை விவசாய மக்கள் தவிக்கும் இழிநிலையையும் சென்ற 11-3-60 ஆம் நாள் நடைபெற்ற சட்ட மன்றத்தில் எடுத்துக் காட்டி சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தூண்டி இருக்கிறேன்.

இன்னும் என் தொகுதியைச் சார்ந்த தாலுகாவில் சுமார் 25,000 ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இந் நிலங்களை ராமநாயக்கன் பாளையம், கம்மான் பாளையம், நாவலூர், கல்லானத்தம், சிறுவாச்சூர், ஊனத்தூர், பெரியேரி தத்தக்கரை, வளையமாதேவி, நடுவலூர், சொக்கனூர், பைத்தூர் மம்மலை, தம்மம்பட்டி, அப்பா சமுத்திரம் ஆகிய ஊர்களில் இருக்கும் ஏழைகளுக்கு வழங்கி வசதி செய்து கொடுக்க வேண்

(10ம் பக்கம் பார்க்க)

நாவலர் கட்டளை 4ம்பக்கத் தொடர்ச்சி

மொழி அந்நிய மொழியோ, அதேபோல்தான் எங்களுக்கு இந்திமொழி அந்நிய மொழி! நீங்கள் எப்படி ஆங்கிலத்தை விரும்பவில்லையோ-அதே போல தான் நாங்களும் இந்தியை விரும்பவில்லை! இதைத் தெளிவாக உணர வேண்டும்!

நமது அமைச்சர் களெல்லாம் "கவலைப்படாதீர்கள், கவலைப் படாதீர்கள்" என்று கூறுகிருர்கள்! "தமிழ்தான் அரசியல் மொழி, தமிழ்தான் போதனை மொழி" என்று வாய் இனிக்கப் பேசுகிருர்கள்! அப்படி என்ருல் இங்கு இந்தி மொழி போதிக்கப்படமாட்டாதா? இந்தி போதிக்கப்படவில்லை என்ருல் தமிழர்களுக்கு மத்திய சர்க்கார் பணிமனைகளில் வேலை கிடைக்குமா? சென்னையிலிருக்கும் தபால் நிலையங்களில், சென்னையி லிருக்கும் புகைவண்டி நிலையங்களில், சென்னையிலிருக்கும் ஏற்றுமதி, இறக்குமதி அலுவலகங்களில் தமிழ் இருக்குமா? தமிழில் நிர்வாகம் நடக்குமா? தமிழனுக்கு அங்கெல்லாம் வேலை கிடைக்குமா? சென்னை சர்க்கார் இந்த உறுதியைத் தருமா? சட்டத்தின் வாயிலாகத் தருமா?

"மத்திய சர்க்காரின் பணிமனைகளில் வேலை செய்ய இந்தி மொழி தேவையில்லை" என்று நமது அமைச்சர்கள் உறுதியளிப்பார்களா?

அப்படியே உறுதி யளித்தாலும் அந்த உறுதியை மத்திய சர்க்கார் மதிக்குமா? ஒரு நாளும் மதிக்காது! இவர்கள் தருகின்ற உறுதியை நம்பி நாம் மோசம் போய்விடக் கூடாது!

இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று சட்டத்தின்மூலம் உறுதியளித்தால் தான் நாம் கொஞ்ச காலத்திற்காவது வாழ முடியும்!

சட்டத்தின் மூலம் உறுதி பெறுவதற்காகத் தான் நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் கண்டன நாள் நடத்தச் சொல்லி இருக்கிருர்!

தமிழகமெங்கும் கண்டனக் குரல் எழுப்பி ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்துவோம்! அதற்கும் பணியவில்லை என்ருல் விரைவில் பெரும்போராட்டத்தை நடத்த நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்!

கறுப்புக் கொடி நிகழ்ச்சியோடு எங்கள் போராட்டம் நின்று விட்டது என்று எவரும் கனவு காணவேண்டாம்! அரசியல் நாகரீகத்திற்காகத் தான் அந்த நிகழ்ச்சி கைவிடப்பட்டது!

எங்கள் படையின் பாதுகாவலர் ஆணையிட்டு விட்டார்! "கண்டன ஊர்வலங்கள் நடத்துங்கள் — பொதுக்கூட்டம் போடுங்கள்—இந்தியை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றுங்கள் அதை ஆட்சியாளர்களுக்கு அறிவியுங்கள்" என்று கூறி விட்டார்! தமிழகம் தொடுக்க இருக்கும் இந்த கண்டனக்கணைகளுக்கு ஆட்சியாளர்கள் பணியவில்லை என்ருல் "போர்! போர்" என்று பறையொலி கேட்கும்! அந்தப் பறையொலியைக் கேட்டுத் தமிழகத்தில் பெரும்படை களத்தில் திரண்டு நிற்கும்! அந்தக் களத்தில் இந்திய ஏகாதிபத்தியம் வீழ்ந்து மடியும்! திராவிடம் விடுதலை பெறும்!

வாழ்க்கை ஒப்பந்தம்

வரும் 26—8—60ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9-மணிக்கு நான், உயர்திரு பி. தாமோதரம் அவர்களின் புதல்வி **செல்வி சுலோச்சன** அவர்களை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும் பதிவுத் திருமணம் **அறிஞர் அண்ண** அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இவ்விழா, சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலுள்ள "ஆலத்தூர் வில்லா" மாளிகையில் நடைபெறும். இவ்விழாவிற்கு யாவரும் வந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்புள்ள,

டி. கே. பொன்னுவேலு

(இருசப்பன் பேச்சு தொடர்ச்சி)

டுமென்று வற்புறுத்தி வருகிறேன்.

என் தொகுதியைச் சேர்ந்த மக்களை நான் அடிக்கடி, நேரில் சந்தித்து, மக்களுக்கிருக்கும் குறை பாடுகளை நீக்கி வருகிறேன். பல பள்ளிக் கூடங்களையும் நேரில் பார்த்து அங்குள்ள பல வசதிக் குறைவுகளையும் நீக்கி பல நன்மைகளைச் செய்து கொடுத்து வருகிறேன்.

இப்படி நான் மட்டுமல்ல தி. மு. கழக சட்ட மன்ற உறுப்பினர்களே தங்கள் தங்கள் தொகுதிக்கும், தமிழகத்திற்கும் பாடு பட்டு அரசினருடன் போராடி வருகின்றனர்.

எங்களின் பேரறிஞர்—இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற அரசியல்மேதை அண்ண அவர் அவர் முதலமைச்சரை அழைத்துச் சென்று தண்டலம் மாநாடு கூட்டி அவரது தொகுதி மக்களின் குறைபாட்டைக் கேட்க வைத்தார்! ...இது எதைக்காட்டுகிறது? எங்களின் பொறுப் புணர்ச்சியையும், கடமை மேம்பாட்டையும் வெள்ளிடை மலையென விளக்கவில்லையா?

அதைப் பின் பிற்றி தோழியர் சத்திய வாணி முத்துவும் தன் தொகுதிக்காக உழைகக வில்லையா? —கலைஞர் கருணாநிதி அவர்கள் குளித்தலையில் ஏழை விவசாயிகளுக்காகப் பெரும் போராட்டம் நடத்தி அங்குள்ளோரின் கண்ணீரைத் துடைத்ததை நாடறியுமே!

இப்படி நாங்கள் பதினைந்து பேரும் நாட்டு மக்களுக்காக உழைத்து வருவதை நாடு நன்கறியும். இருந்தும் ஒரு சிலர் கண்மூடித் தனமாகபிதற்றுகின்றனர்; சீறுகின்றனர்.

இவைகளுக் கெல்லாம் நாங்கள் மனம் கலங்காமல் நாளும் உழைத்து வருகிருேம், நமக்கு திரண்டு நிற்கும் மக்களின்சக்தி பேராதரவைத் தருகின்றது என்ற பேருக்கமே இதன் காரணம்!...

"இப் படை தோற்கின் எப் படை ஜெயிக்கும்" என்று எங்கள் அண்ண கூறுவதைப் போல் நாளும் வளர்ந்து வரும் பரணி பாடும் இளைஞர் பட்டாளம் வெற்றி முரசு கொட்ட இருக்கிறது! எங்கள் படை வெற்றி காணும்! வெற்றி காண காஞ்சி தந்த கரிபால்டி பல்லவ நாட்டுச் சிங்கம் எங்கள் அண்ண வழி வகுக்கிருர்!...வழி வகுப்பார்!... அவர் காட்டும் வழி நின்று பாடுபடுவதே எங்கள் சட்ட சபைத் தொண்டு. நாங்கள் சிறு பான்மையோராக இருந்தாலும் எங்களாலானதை மக்களுக்காகச் செய்ய பாடு பட்டே வருவோம்.

விற்பனையாளர்கள் கவனிக்கவும்!

மாலை மணி விற்பனையாளர்களில் வெகு பலர், வாரா வாரம் "அதிக இதழ்கள் வேண்டும், அதிக இதழ்கள் வேண்டும்" என்று எழுதிக்கொண்டே வருகின்றனர்!

ஆரம்பத்தில் ஒரு பத்து, இருபது இதழ்களுக்கு முன் பணம் கட்டியவர்களெல்லாம் "நூறு, இருநூறு" வேண்டுமென்று கேட்கின்றனர்! 'இது கவனிக்கப்படுவதில்லை' என்றும் சிலர் வருத்தப்படுகின்றனர்!

"மாலை மணி"யின் விற்பனையைப் பெருக்கி வரும் நண்டர்களுக்கு எங்களது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்,

அதிக இதழ் வேண்டுவோர் அதற்குரிய முன் பணத் தொகையையும் அனுப்பித் தர வேண்டுகிருேம். முன் பணம் இன்றி வரும் கடிதங்கள் நிச்சயமாகக் கவனிக்கப்பட மாட்டாது,

சில விற்பனையாளர்கள் பில் தொகையைச் சரிவர கட்ட ஏற்பாடு செய்வதில்லை! பில் கிடைத்த 4 தினங்களில் பில் தொகையை அனுப்பித் தர வேண்டும்! அப்படி அனுப்பித்தராத விற்பனையாளர்களுக்கு எந்த விதமான முன் அறிவிப்பும் இல்லாமல் இதழ்கள் அனுப்புவது நிறுத்தப்படும்!

தயது செய்து விற்பனையாளர்கள் எங்களோடு ஒத்துழைக்க வேண்டுகிருேம்.

நிர்வாகி,

மாலைமணி

இந்தி தேவையில்லை, எங்களுக்கு இந்தி தேவையில்லை !

தேம்ஸ் நாகரீகத்தை ஒழித்தோம்! கங்கை நாகரீகத்தையும் ஒழிப்போம்!

சத்திரத்துச் சாப்பாடு நம்மோடு ஒழியட்டும் ! நம் சந்ததிகளுக்கும் திருவோட்டைத் தரவேண்டாம் !

எழுந்துவிட்ட மாணவர் படையை எந்த சக்தியால் அடக்குவீர்கள்?

அதைத்தான் கொஞ்சம் சொல்லுங்களேன் ?

இந்திய துணைக் கண்டத்து குடியரசுத் தலைவர் பாபுராஜேந்திர பிரசாத், சென்னையில் பேசிய பேச்சு மாணவப் பெரும் படையைக் கொதித்தெழ வைத்திருக்கிறது.

குடியரசுத் தலைவரின் பேச்சு, மொழியைப் பற்றி அவர் தந்த கருத்துரை, ஆங்கில மொழியைப் பற்றி அவர் தந்த விளக்கம், முடிவில் இந்தி மொழிக்கு அவர் காட்டிய பரிவு மாணவர்களுக்கு பெரும் திகைப்பையும், திகிலையும் உண்டாக்கி இருக்கிறது !

ஏறத்தாழ இரண்டு, மூன்று நூற்றாண்டு காலம் வரை ஒரு அந்நியனுக்கு அடிமைப்பட்டு, அவனது மொழியைக் கற்று, அவனது நாகரீகத்தையும், பண்பாட்டையும், நடை, உடை, பாவனைகளையும் மெல்ல, மெல்ல ஏற்று—நம்மில் பலர் தேம்ஸ் நதிக் கரையில் உலாவி அங்குள்ள பழக்க வழக்கங்களில் மூழ்கி—நம்மையே நாம் மறந்து கிடந்தோம் ! "தமிழ் அழிந்து விட்டதோ, தமிழ் இனம் மறைந்து விட்டதோ" என்று நாம் பெரும் கவலைப்பட்டுக் கிடந்தோம் !

அந்தக் கவலையைப் போக்கத்தான் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் கிளம்பினார்கள்! அவரது பெரும் பணியால் தமிழ் மெல்ல மெல்ல தன் உரு பெற்றது. தமிழகம் மெல்ல மெல்ல தன் நிலை அடைந்தது!

புது உருபெற்ற தமிழ், கல்லூரியில் நுழைந்தது மாணவர்களின் உள்ளங்களைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தது. பண்டிதப் பெரு மக்களிடம் அண்டிக் கிடந்த தமிழ் பாமரர்களிடம் நுழைய ஆரம்பித்தது! தேம்ஸ் நதிக் கரையிலே உப்பங் காற்று வாங்கியவர்கள் காவேரி கரைக்கு வந்தார்கள், தென்றலின் சுகத்தை அடைந்தவர்கள், அதிலே மெய் மறந்தார்கள் !

"தமிழ் வாழத் தொடங்கி விட்டது, தமிழ் நாடு தன் மானப் பாதையில் நடக்கத் தொடங்கி விட்டது" என்று பெரு மகிழ்வால் பூரிப்படைந்துக் கிடந்தோம் !

எந்த மாணவர்கள் ஆங்கில மோகத்தில் மூழ்கிக்கிடந்தார்களோ, எந்த மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசாவிட்டால் அநாகரீகம் என்று எண்ணிக்கிடந்தார்களோ—அந்த மாணவர்களெல்லாம் "தமிழ் தமிழ்" என்று முழங்கத் தொடங்கினார்கள் ! இது நமக்குப் பெரும் மகிழ்வைத் தந்தது, இது நமக்குப் பெரும் பூரிப்பை யளித்தது !

ஆனால், இந்த பெரும் பூரிப்பும், மகிழ்ச்சியும் நம்மிடம் நீடித்து நிலைத்து, நீண்ட நாள் தங்க முடியாமல் போய் விட்டது!

ஒரு அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு மீண்டும் ஒரு அந்நிய ஏகாதிபத்யத்திடம் அடிமை கொண்டு வாழும்நிலை பிறந்தது! அந்த அந்நியன் எப்படித் தன் மொழியைக் கற்றுக் கொண்டால்தான் "சோறு கிடைக்கும், வாழ்வு கிடைக்கும்" என்று சொன்னானோ அதே போல் இந்த அந்நிய ஏகாதிபத்தியமும் தன் மொழியைக் கற்றுக் கொண்டால்தான் "சோறு கிடைக்கும், வாழ்வு கிடைக்கும்" என்று கூறத் தலைப்பட்டது!

"தேம்ஸ் நதிக்கரையின் நாகரீகம் ஒழிந்தது" என்று பெரும் பூரிப்பால மகிழ்ந்து கிடந்த நமக்கு கங்கை கரையின் நாகரீகக் காற்று வீசத் தொடங்கி இருக்கிறது !

லண்டன் பட்டினத்து பண்பாடு ஒழிந்து விட்டது என்று எண்ணிக் கிடந்தோம் ! ஆனால் இப்போது டெல்லிப் பட்டணத்தின் பண்பாடு நம்மைக் கவ்விப் பிடிக்கத் தொடங்கி விட்டது !

நம்முடைய நிலை — "கத்தி போச்சுது, வால் வந்தது டும், டும்" என்ற நிலையாச்சு ! ஆங்கிலம் போச்சுது இந்தி வந்தது ! தமிழ் என்னாச்சு" இந்த வினாவுக்கு பதில் கிடைக்க நாம் கொடுத்த பரிசு மிக ஏராளம், மிக ஏராளம்! என்றாலும் நமக்குத் தெளிவான விடை கிடைக்கவில்லை !

யாரைக் கேட்டாலும்— "இந்தி கட்டாயமில்லை, நிச்சயமாகக் கட்டாயமில்லை" என்றுதான் கூறுகிறார்கள் !

எவரைக் கேட்டாலும் "இந்தி வராது, அது எந்தக் காலத்திலும் வராது, நிச்சயமாக வரவே வராது" என்றுதான் சொல்கிறார்கள் !

"எந்தக் காலத்திலும்" என்பது வெறும் வாய்ப் பேச்சுதான் அந்தப் பேச்சும் வேளைக்கொரு விதமாக இருக்கிறது, நாளுக்கொரு விதமாக இருக்கிறது !

சட்டம் திருத்தப்படும் என்கிறார்கள் ! எப்படித் திருத்தப்படும் எந்த முறையில் திருத்தப்படும்!

1965 என்பது எழுபதாகலாம், அல்லது எண்பதாகலாம்—அதற்குப் பின் நிலை என்ன? அத்தோடு தமிழ் நாட்டின் ஆயுள் காலமே முடிந்து விட்டதா?

சென்னையில் பேசிய பாபு ராஜேந்திரப் பிரசாத்—"எங்கள் மீது ஆங்கிலத்தைத் திணிக்காதீர்கள்" என்று கூறி இருக்கிறார் ! இதற்குப் பொருள் என்ன ? "எங்களுக்கு ஆங்கிலம் தேவை இல்லை. இந்திதான் வேண்டும்" என்பது தானே இதன் அர்த்தம் !

அதே கூட்டத்தில் பாபு ராஜேந்திர பிரசாத — "நம்முடைய சட்ட அமைப்பு பிரிட்டிஷாரின் சட்ட அமைப்பு முறையில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது" என்று கூறி இருக்கிறார்!

அவர்களுக்கு வெள்ளைக்காரனுடைய மொழி தேவையில்லை, ஆனால் அவர்களுடைய சட்ட அமைப்பு மட்டும் தேவைப்படுகிறது ! இந்த விந்தையை நாம் யாரிடம் சொல்லுவது, எவரிடம் கூறி புலம்புவது ?

அவனுடைய சட்ட முறை கசக்கவில்லை, அவனுடைய மொழி மட்டும் கசக்கக் காரணமென்ன ?

பெரும் மதிப்பிற்குரிய பாபு ராஜேந்திர பிரசாத் இதைச் சொல்லி இருக்கக் கூடாது ! அவனுடைய மொழி அறவே கூடாது என்று நினைக்கிறவர்

(8ம் பக்கம் பார்க்க)

O.M.S.

Registered as a Newspaper in CEYLON

Regd. No. M. 7074 **MALAIMANI** விலை 16 காசு இலங்கையில் 20 சதம் Phone 83285

சென்னை மாவட்டத்திற்கு

(11ம் பக்கத் தொடர்ச்சி)

என். ஜீவரத்தினம்

கோ. செங்குட்டுவன்

வி. என். கோவிந்தராசன்

கோ: இளவரசு

டி. எஸ்; நல்லதம்பி

குமாரசாமி

ஜார்ஜ்

ஆகிய பதினைந்து பேரும் பொதுக் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்! இதில் அத்தனை பேரும் மிகப் பொறுப்பு வாய்ந்தவர்களாவார்கள்!

நமது இயக்கத்தை கட்டி காத்திடும் பொறுப்பு பொதுக் குழுவுக்குத்தான் உண்டு! நமது இயக்கத்தின் ஒவ்வொரு செயலுக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் தான் பொறுப்பாளியாகின்றனர்! இயக்கத்தின் வாழ்வும். தாழ்வும் இவர்களுடையகையில்தான் இருக்கிறது! நாம் கொண்டிருக்கிற நாம் வைத்திருக்கிற குறிக்கோளையும், இலட்சியத்தையும் முன் வைத்து செயல்படவேண்டும்!

எந்த காலத்திலும். எந்த நேரத்திலும் மிக மிக கட்டுப்பாட்டோடு பணி புரியவேண்டும்! சொந்த விருப்பும், வெறுப்பும் இவர்களுடைய உள்ளத்தில் கொஞ்சமும் தலை காட்டக் கூடாது!

சென்னையைப் பொறுத்தமட்டில் பொதுக்குழு உறுப்பினர்கள் அனேகமாக அத்தனை பேரும் இயக்கத்தில் நீண்ட நாட்களாகப் பணிபுரிந்து வருபவர்கள்தான்! இவர்களுக்கு கட்டுப்பாட்டைப் பற்றியோ, செய்திடும் கடமையைப் பற்றியோ, நடைபிடிக்க வேண்டிய கண்ணியத்தைப் பற்றியோ நாம் சொல்லவேண்டியதில்லை!

சென்னை மாவட்டத்தில் வெற்றி பெற்று வந்திருக்கும் மாவட்டச் செயலாளரையும் துணைச் செயலாளரையும், பொருளாளர், அவைத் தலைவர், பொதுக்குழு அத்தனை பேரையும் பாராட்டுகிறோம்.



திருவல்லிக்கேணி பகுதி திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நல்ல செயல் வீரர் — கொள்கைச் சிகரம் — குணக் குன்று — நம் கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வரும் தோழர்,

நீல நாராயணன்

மாவட்ட கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிதாகத் தேர்ந்தெடுத்துள்ள மாவட்டச் செயலாளரின் புகைப்படத்தை வாங்கி "மாலை மணி" இதழில் பிரசுரிப்பதற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்

★

இலங்கை தி. மு. க. முன்னணி வீரர்களின் சுற்றுலா!

இலங்கையில் பெருமளவு ஆதரவைப் பெற்று வளர்ந்து வரும் திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் முக்கிய வீரர்களின் குழு ஒன்று மலைநாட்டில் சுற்றுப் பயணம் செய்து வருகின்றது

தோழர்கள் இரா. அதிமணி, ஏ. எஸ். மணவைத் தம்பி, பா. ம. சிமோன், ஜே. சோமசுந்தரம், எஸ். எம். நமசிவாயம். எச் பத்மநாதன் ஆகியோர் அந்த குழுவில் அடங்கி உள்ளனர்.



71-வது வட்டம் நேரு நகர் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர்

வி. என். சுப்பிரமணியம்

விற்பனையாகிறது!

அரசியல் கருவூலம்

"போர்வாள்"

ஆசிரியர்: ஏ. கே. வில்வம்

(மாதம் மும்முறையாக மலர்கிறது)

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு:

போர்வாள்,

17, ஓயிட்ஸ் ரோடு, சென்னை-14.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் காங்கிரஸ் காலித்தனம்!

அன்பழகன் அதிகாரிகள் சந்திப்பு!

சென்ற இரண்டு மூன்று தினங்களுக்கு முன் சிந்தாதிரிப்பேட்டையில், காங்கிரஸ் ரௌடிகள் கழகத் தோழர்களைத் தாக்கியது சம்பந்தமாக அங்கு ஒரே பரபரப்படைந்திருக்கிறது.

எழும்பூர் வட்ட சட்டமன்ற உறுப்பினரும், கழகத் தலைவர்களில் ஒருவருமான திரு க. அன்பழகன் அவர்கள் போலீஸ் உயர்தர அதிகாரிகளுடன் இது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. திரு. க. அன்பழகன் போலீஸ் அதிகாரிகளை சம்பவம் நடந்த இடத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

அதிகாரிகள் தீர விசாரணை செய்வதாக ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸ் காலிகளின் காலிச் செய்கைகளால் ஆத்திரமடைந்த பொது மக்களை திரு. அன்பழகனும், மற்றும் இயக்கத் தோழர்களும் சமாதானப்படுத்தி கட்டுப்பாடுடன் இருக்கும்படி வேண்டிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.